Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | மார்கழி 09 | (24-12-1992) | வியாழக்கிழமை | ஓசை 810

## நட்டஈட்டில் வேறுபாடு படையினர் அதிருப்தி

பாதுகாப்பு படையின் தளபதிகளை விட அரசியல் வாதிகளின் மரணத்திற்காக பெரு அளவு தொகை நட்ட ஈடாக வழங்கப்படுவது குறித்து பாதுகாப்பு வட்டாரங்களில் அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகத்தெரியவருகிறது. அராலித் துறை கண்ணிவெடித் தாக்குதலில் மரணமடைந்த மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவிற்கு எழுபத்தையாயிரம் ரூபாவும் கொழும்பு குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோவிற்கு எழுபத்தையாயிரம் ரூபாவும் நட்ட ஈடாக வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால் தீவிரவாத செயல்களால் மரணமடைந்த [3ஆம் பக்கம் பார்க்க]

# புலிகளுடன் ரகசிய பேச்சுவார்த்தை செய்திக்கு அரசாங்கம் மறுப்பு

## யூ. என். எச். சி. ஆர் குழு மன்னார் விஜயம்

யூ.என். எச். சி. ஆர் என்று அழைக்கப்படும் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தின் உயர்மட்டத் தூதுக்குழுவொன்று மன்னார் சென்றுள்ளது. அங்கு தமிழ் நாட்டிலிருந்து நாடு திரும்பிய அகதிகளின் மீளக்குடியமர்தல் தொடர்பான நடவடிக்கைகளை இவர்கள் பார்வையிட்டதாகவும் இன்று அல்லது நாளை கொழும்பு திரும்பக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## அனுமதி

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் ஆண்டு 6க்கான அனுமதிகள் கோரப்படுகின்றன.
[3 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவத் தீர்வே சாத்தியமாம்

[கொழும்பு]

"உலகின் எப்பகுதியிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை" என சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார் மேலும் 1994ஆம் ஆண்டின் இறுதிக்கு முன் சமாதான சூழ்நிலை உருவாகும் என்றும் அது இராணுவத்தினரின் முன்னணி நடவடிக்கை மூலமே சாத்தியமாகும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்தே அரசின் சார்பில் சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பத்திரிகையாளர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அரசு புலிகளுடன் போர் நிறுத்தம் தொடர்பாக பாரிசில் உள்ள புலிகளின் காரியாலயத்துடன் பேச்சுவார்த்தை எதிலும் ஈடுபடவில்லை என்றார்.

1994 டிசம்பரில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன் வடக்குக் கிழக்கில் சமாதான சூழ்நிலை உருவாகும் எனக் கூறிய பிரட்மன் தான் இதனைத் தெரிவித்தது இராணுவத்தினரின் முன்னணி நடவடிக்கையின் மூலமே சாத்தியமாகும் எனவும் மாறாக அரசியல் தீர்வை மையமாக கொண்டு அல்ல எனவும் குறிப்பிட்டார்

இதேவேளை சிறிலங்காவின் உயர் கல்வி அமைச்சர் ஹமீத் ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற் கொண்டுள்ளார் என்பதை ஒப்புக்கொண்ட வீரக்கோன் அவரது விஜயத்திற்கான காரணம் பற்றி தனக்கு தெரியாது எனவும் கூறினார்.

## எல்லையில் சிங்களவர்வாழ்வது புலிகளின் மனிதநேயத்தினாலாகும்

### கிழக்கு மாகாண விகாராதிபதி தெரிவிப்பு

[கொழும்பு]

"எல்லைக் கிராமங்களில் சிங்கள மக்கள் உயிர்வாழ்வது எமது பாதுகாப்புப் படையினரின் திறமையினாலோ அல்லது யுத்தத்தில் ஏற்பட்ட வெற்றியினாலோ அல்ல. புலிகளின் மனித நேயத்தினாலேயே அவர்கள் அங்கு உயிர்வாழ்கின்றார்கள்" இவ்வாறு கிழக்குமாகாணபௌத்தவிகாரை ஒன்றின் பிரதம மதகுரு சங்கநாயக செறுவிலசரணாகீர்த்தி தேரோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை...

"புலிகள் நினைத்தால் சிங்கள எல்லைக் கிராமங்களைத் தாக்கலாம். அங்குள்ள பாதுகாப்புப் படையினர், ஊர் காவல்படையினருக்குக் கூடப் பாதுகாப்பில்லை. சராசரியாகத் தினமும் ஒரு பங்கர் தாக்கப்பட்டு 10 சிப்பாய்கள் கொல்லப்படுகின்றார்கள் அல்லது காயமடைகின்றனர். இதிலிருந்து எமக்கு ஏற்படவிருக்கும் தோல்வி தெரிகின்றது"

"கூட்டுப்படைத் தலைமை (4ஆம் பக்கம் பார்க்க)

### அனுராதபுர விமான நிலைய

## குண்டு வெடிப்பினால் 50 வீடுகள் சேதம்

அனுராதபுரம் விமான பட்டிருந்த ...

## யுத்தத்திற்கு முடிவுகாண ஆயர்கள் முயலவேண்டும்

### - வண. தொமஸ் அடிகளார்

[யாழ்ப்பாணம்]

பத்து வருடங்களாக இழுபடும் வடக்கு கிழக்குயுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் நீதியின் அடிப்படையில் அமைந்த ஒரு சமாதானத் தீர்வை எட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று யாழ் ஆயர் அதி.வண.தொமஸ் சௌந்தரநாயகம் ஆயர்கள் மகாநாட்டைக் கேட்டுக் கொண்டார்.

அதி. வண. தொமஸ் சௌந்தரநாயகம் யாழ் ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்ட பிறகு. யாழ். ஆயர் என்ற வகையில் இம் மகாநாட்டில் முதன் முறையாகக் கலந்து கொண்டார். மாநாடு பதுளை ஆயர் இல்லத்தில் இம் மாதம் 9 முதல் 12 ஆம் திகதி வரை நடைபெற்றது

நீண்ட காலமாக மக்கள் பொருளாதாரத் தடை மற்றும் போக்குவரத்துப் பாதைகள் மூடப்பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளால் சொந்த மண்ணிலேயே கைதிகள் போல மோசமாகப்பாதிக்கப்பட்ட நிலையில் வாழ்கிறார்கள் என்று குறிப்பிட்ட அவர்;

இரு சமூகங்களுக்கும் இடையிலான நல்லெண்ணத்துக்காக உழைக்கும் கத்தோலிக்க திருச்சபை, சமாதானத்துக் [3 ஆம் பக்கம் பார்க்க]

## தற்காலிக யுத்தநிறுத்தம் தளபதிகள் பொறுப்பாம்

[கொழும்பு]

நத்தார் பண்டிகைக்காலத்தில் யுத்த நிறுத்தம் செய்வது குறித்து பிராந்திய தளபதிகளே முடிவெடுக்க வேண்டும் எனவும் தலைமைப் பீடத்திற்கும் அதற்கும் எதுவித தொடர்புமில்லை எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நவீன் அகங்க செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மேலும் நிரந்தர யுத்தநிறுத் ... அறிவுறுத்தலும் தங்களுக்கு கிடைக்கவிலலை எனவும் தெரிவித்தார்.

### ஜனாதிபதி பிரேமதாசாவிடம்

## பாதையை திறக்குமாறு யாழ். ஆயர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

சிறிலங்காஅரசு யாழ். குடாநாட்டின் மீது விதித்துள்ள போக்குவரத்துத் தடையை நீக்கிப் பாதைகளைத் திறந்து மக்கள் தங்கு தடையின்றிப் பிரயாணம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு யாழ். ஆயர் அதி.வண. தொமஸ் சௌந்தரநாயகம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைக் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைத் [3 ஆம் பக்கம் [பார்க்க]

## தமிழக பொலிசார் மீது வர்மா கமிசன் குற்றச்சாட்டு

### ராஜீவ் கொலைக்கு கவனக்குறைவே காரணமாம்

# எல்லையில் சிங்களவர் வாழ்வது புலிகளின் மனிதநேயத்தினாலாகும்

## கிழக்கு மாகாண விகாராதிபதி தெரிவிப்பு

[கொழும்பு]

''எல்லைக் கிராமங்களில் சிங்கள மக்கள் உயிர்வாழ்வது எமது பாதுகாப்புப் படையினரின் திறமையினாலோ அல்லது யுத்தத்தில் ஏற்பட்ட வெற்றியினாலோ அல்ல. புலிகளின் மனித நேயத்தினாலேயே அவர்கள் அங்கு உயிர்வாழ்கின்றார்கள்'' இவ்வாறு கிழக்குமாகாணபௌத்தவிகாரை ஒன்றின் பிரதம மதகுரு சங்கநாயக செறுவிலசரணாகீர்த்தி தேரோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

''புலிகள் நினைத்தால் சிங்கள எல்லைக் கிராமங்களைத் தாக்கலாம். அங்குள்ள பாதுகாப்புப் படையினர், ஊர் காவல்படையினருக்குக் கூடப் பாதுகாப்பில்லை. சராசரியாகத் தினமும் ஒரு பகிகர் தாக்கப்பட்டு 10 சிப்பாய்கள் கொல்லப்படுகின்றார்கள் அல்லது காயமடைகின்றனர். இதிலிருந்து எமக்கு ஏற்படவிருக்கும் தோல்வி தெரிகின்றது''

''கூட்டுப்படைத் தலைமை

(4ஆம் பக்கம் பார்க்க)

அனுராதபுர விமான நிலைய

## குண்டு வெடிப்பினால் 50 வீடுகள் சேதம்

அனுராதபுரம் விமான நிலையத்தில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த பீப்பாக் குண்டுகள் சில அப்புறப்படுத்தப்படும்போது வெடித்தமையால் விமானப்படை முகாமின் சுற்றாடலில் அமைந்திருந்த சுமார் ஐம்பது வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

விமானப்படைத் தளத்தில் நடைபெற்ற இந்த குண்டு வெடிப்பினால் சுமார் ஐந்நூறு அடி விஸ்தீரணமுள்ள பகுதியில் எட்டு அடிவரை ஆழமான கிடங்கு ஏற்பட்டிருப்பதுடன், அப்பகுதி வீடுகள் பலவும் பல

[3 ஆம் பக்கம் பார்க்க]

விஜயம் ஒன்றை மேற் கொண்டுள்ளார் என்பதை ஒப்புக் கொண்ட வீரக்கோன் அவரது விஜயத்திற்கான காரணம் பற்றி தனக்கு தெரியாது எனவும் கூறினார்.

## தற்காலிக யுத்தநிறுத்தம் தளபதிகள் பொறுப்பாம்

[கொழும்பு]

நத்தார் பண்டிகைக்காலத்தில் யுத்த நிறுத்தம் செய்வது குறித்து பிராந்திய தளபதிகளே முடிவெடுக்க வேண்டும் எனவும் தலைமைப் பீடத்திற்கும் அதற்கும் எதுவித தொடர்புமில்லை எனவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நவீன் அகங்க செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மேலும் நிரந்தர யுத்தநிறுத்தம் தொடர்பாக எதுவித அறிவுறுத்தலும் தங்களுக்கு கிடைக்கவிலலை எனவும் தெரிவித்தார்.

அதி. வண. தொமஸ் சௌந்தரநாயகம் யாழ் ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்ட பிறகு. யாழ். ஆயர் என்ற வகையில் இம் மாநாட்டில்

ஜனாதிபதி பிரேமதாசாவிடம்

## பாதையை திறக்குமாறு யாழ். ஆயர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

சிறிலங்காஅரசு யாழ். குடாநாட்டின் மீது விதித்துள்ள போக்குவரத்துத் தடையை நீக்கிப் பாதைகளைத் திறந்து மக்கள் தங்கு தடையின்றிப் பிரயாணம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு யாழ். ஆயர் அதி.வண. தொமஸ் சௌந்தரநாயகம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைக் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைக்

[3 ஆம் பக்கம் [பார்க்க]

# தமிழக பொலிசார் மீது வர்மா கமிசன் குற்றச்சாட்டு

## ராஜீவ் கொலைக்கு கவனக்குறைவே காரணமாம்

[டிலலி]

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் பாதுகாப்பு சீர்கேட்டிற்கு தமிழக அரசும், மத்திய அரசும், காங்கிரஸ் ஊழியர்களும் பொறுப்பாகும் என வர்மா ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ராஜீவ் காந்தியின் கொலை பற்றி விசாரித்த வர்மா ஆணைக்குழுவின் அறிக்கை நேற்று லோக்சபாவில் சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்தவருடம் மே 21 ஆம் திகதி சிறி பெரும்புதூரில் ராஜீவ் காந்தி கொல்லப்படுவதற்கு வழிவகுத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் சீர்குலைந்து போவதற்கு தமிழக அரசும், மத்திய அரசும், இந்திரா காங்கிரஸ் ஊழியருமே காரணம் என்று அவ் ஆணைக்குழு குற்றம் கண்டுள்ளது.

ராஜீவ் காந்தியை நெருங்க விடாமல் தடுப்பதற்கு வேண்டிய போதுமான வகையில் நெருக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்குத் தமிழ் நாடு பொலிஸ் தவறி விட்டது என்று இரண்டு பகுதிகளாகச் சமர்ப்பிக்கப்பட்ட அந்த விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு குறைபாடுகளுக்கு தமிழ்நாடு காவல்துறையே பொறுப்பு என்றும் மத்திய உளவு இலாகா தம் வசம் இருந்த முழுத் தகவல்களையும தமிழக காவல்துறையுடன் பகிர்ந்துகொள்ள வில்லை என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(3 ஆம் பக்கம் பார்க்க)

தெரிவுக் குழுவிலிருந்து

# உடனடியாகவிலகும் சாத்தியப்பாடில்லை

### - தமிழ்க்குழுக்கள் அறிவிப்பு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவென மங்கள மூனசிங்க தலைமையிலான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே தமிழ்க் குழுக்கள் அடுத்த நடவடிக்கை பற்றி முடிவு செய்யும் என்றும், தெரிவுக் குழுவிலிருந்து உடனடியாக விலகும் சாத்தியப்பாடு எதுவும் இல்லை என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈ. பி. ஆர். எல். எவ்வும் கூறியுள்ளன.

## “ஜெயகங்கா” பூர்த்தியாம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்து நாட்களாக மேற்கொள்ளப்பட்டுவந்த ''ஜெயகங்கா'' இராணுவ நடவடிக்கை பூர்த்தியடைந்து விட்டதாகக் கூட்டுப்படை தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

# வவுனதீவில் புலிகள்தாக்குதல் ஒருபடை பலி; பலர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவ அணி மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரு நிமிட அதிரடித் தாக்குதலில் இராணுவத் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் அவரது ஆயுதமும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டது.

கடந்த செவ்வாய் இரவு 7.35 மணியளவில் மட்டு வவுனதீவு இராணுவ முகாமிலிருந்து 200 யார் தொலைவிலுள்ள வலையிறவு சின்னப் பாலத்தில் அமைந்திருந்த காவலரணுக்கு சென்றுகொண்டிருந்த இராணுவ அணியினர் மீதே இத் தாக்குதல் நடத்தப் பட்டது.

இத்தாக்குதலின் போது படையினர் ஒருவர் கொல்லப் பட்டார். ஏனையோர் காயங் களுடன் முகாமுக்குள் ஓடி விட்டனர்.

இதேவேளை வலையிறவு பாலத்திலிருந்த காவலரண் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேத விபரம் கிடைக்கவில்லை.

இத்தாக்குதலின் போது

★ ரி56-1 ரகதுப்பாக்கி — 01
★ இதன் மகசின் — 01
★ நடுத்தர ரவைகள் — 30

ஆகியன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## தமிழர் பிரச்சினையே தீர்க்கப்படாத ஒன்று

### - பிரேமதாசா

ஐக்கிய தேசியக் கட்சியின் பதவிக் காலத்தில் இன்னமும் தீர்க்கப்படாத ஒரே ஒரு பிரச்சினை தமிழர் பிரச்சினையே ஆகும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

இந்தத் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசியல் கருத்து வேறுபாடு இன்றி முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில்

## ஜனாதிபதி ஆட்சி; நோக்கம் எதுவுமில்லை

### -மத்திய அரசு அறிவிப்பு

தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்தும் நோக்கம் எதுவும் இல்லை என்று மத்திய அரசு நேற்று தெளிவுபட அறிவித்துவிட்டது இவ்வாறு வெளிவந்த செய்திகள் அனைத்தும் தவறான ஊகத்தின் அடிப்படையிலானவை என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

எதிர்க்கட்சிகளுக்கிடையில்

# உள்ளூராட்சித் தேர்தலில் உடன்பாடுகாண்பதில் சிக்கல்

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சிகளுக்கிடையேயும் சுதந்திரக் கட்சி உறுப்பினர் இடையேயும் ஒருமைப்பாடு நிலவவில்லை என சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அனுரா அணியும் சிறிமா அணியும் தமதுசார்பானவர்களை பட்டியலில் இடுவதற்குப் போட்டியிடுவதாக சுதந்திர கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்சிகள் தமது உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என வேண்டுகிறார்கள். அனுரா குழுவினர் ஐ தே. கட்சிக்கு செல்வாக்கு உள்ள இடத்தில் மட்டும் பொது வேட்பாளர்களை நிறுத்தவும் ஏனைய இடங்களில் கட்சி தனித்தனியே போட்டியிட வேண்டும் என்றும் விரும்புவதாகத் தெரிகிறது.

இவ்வாறான திட்டத்தை ஏனைய எதிர்க்கட்சிகள் விரும்பவில்லை. அத்துடன் அபேட்சகரை நியமனம் தொடர்பாக முதலிடம் பெறுவதிலும் தேர்தல் சின்னம் தொடர்பாகவும் கட்சிகளிடையே ஒற்றுமையை காண முடியாத நிலையில் எதிர்க்கட்சிகளின் கூட்டு திண்டாடுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## முகாமருகில் நடமாடிய இரு தமிழர் கைது

[கொழும்பு]

சிறிலங்கா இராணுவத்தின் பனாகொட முகாமிற்கு சொந்தமான குறிவைத்து சுடும் பகுதி அமைந்திருக்கும் சுற்றாடலில் நடமாடிய தமிழ் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பான புலன் விசாரணைதொடர்ந்து நடைபெறுவதாகவும், விஜேசேகர், ராஜகோபால் என்ற இருவருமே கைது செய்யப்பட்டவர் எனவும் இவர்கள்பழைய பித்தளைப் பொருள்களைக் கொள்வனவு செய்பவர்கள் எனவும் மேலும் தெரியவருகிறது.

எனினும் ஜனவரி 28-ம்திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பில்

# பல்கலை. மாணவர்மீது பொலிசார் தாக்கு

கொழும்பு பல்கலைக் கழக மாணவர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பொலிசார் குண்டாந்தடி பிரயோகம்மேற்கொண்டனர். அத்துடன் படப்பிடிப்பாளர் மீதும் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பு பல்கலைக் கழக மாணவர்கள் தற்போதைய உயர் கல்வித் திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இவர்கள் பல்கலைக் கழக பிரதான வாயிலில் சுமார் 30 நிமிட நேரம் ஆர்ப்பாட்டம் செய்தபின் பல்கலைக் கழக வளவினுள் செல்லும் போது பொலிசார் மாணவர்கள் மீது தாக்குதலை நடத்தினர்.

இதனைப் படம் பிடித்த படப் பிடிப்பாளர்கள் குண்டாந்தடியாலும், துப்பாக்கியின் பின்புறத்தினாலும் தாக்கப்பட்டனர்.

பொலிசார் படப்பிடிப்பாளர்களையும், செய்தியாளரையும் தாக்கியதை ''ராய்ட்டர்'' செய்திவாளர் நேரடியாக கண்டுள்ளார் என்று தெரியவருகிறது.

## வரி விளம்பரம்

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல பணிக்கூடு பற்றறிசளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5588)

### தவறிவிட்டது

மெடி ஓசன் உரும்பிராய் உரும்பராய்ச் சந்திக்கு அண்மையில் புத்தகம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உரும்பராயில் அமைந்துள்ள பார்மசியில் (Medi Oucean) சமர்ப்பிக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும் (3239)

### நீம் தூபம் நுளம்பு விரட்டி

நுளம்புத் தொல்லையா? மலேரியா அச்சமா? இருக்கவே இருக்கிறது நீம் தூபம். இரவில் சாம்பிராணி போல் புகைத்து நுளம்பை விரட்டி விமோசனம் காணுங்கள். அண்ணா கோப்பிக்கடைகளிலும் கிடைக்கிறது "நீம் தூபம்" -மில்க்வைற் "சி/5625

### காணவில்லை

இரஞ்சினிதேவியையும் அவரது இரு சிறுபிள்ளைகளையும் கடந்த இரு மாதங்களாகக் காணவில்லை. இவர்களைக் கண்டவர்கள் அண்மையிலுள்ள காவல்துறைக்கோ அல்லது உடுவில் கிழக்கிலுள்ள அண்ணா சனசமூக நிலையத்திற்கோ அறிவிக்கவும். தகவல்: இ. சின்னம்மா (தாய்) உடுவில் (3838)

### கண்காட்சி முடிவுற்றது

(கொழும்புத்துறை)

தென்மராட்சி வேரக்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கைப்பணி பொருட்காட்சி சங்கத் தலைவி குமுதினி- கணபதிப்பிள்ளை தலைமையில் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

# மட்டக்களப்பிலும் பதிவு செய்ய பணிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் உள்ள வீடுகளில் புதிதாக தங்கியிருப்பவர்கள்தொடர்பான விபரங்கள் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்தல் வேண்டும் என்றும், இவ்வாறு பதிவு செய்யத் தவறும் வீட்டுச் சொந்தக்காரர் மீது அவசரகால விதிகளின் கீழ் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்று பொலிசார் அறிவித்துள்ளனர்

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு நகரில் ஒலிபெருக்கி மூலம் இவ் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

## 31-ம் நினைவு நாள்



| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 08 | 24 |
| — | — |
| 04 | 11 |
| — | — |
| 1972 | 1992 |

### கப்டன் மலரவன் (லியோ)

[காசிலிங்கம் விஜிந்தன்]

பாசத்தாலும் மனிதாபிமானத்தாலும்
அணுஅணுவாக கட்டியெழுப்பப்பட்ட
அழகான வீடு
இடையில் வந்த புயலால்
அவ்வீட்டினது அன்பான கூரை
விண்ணுக்குப் போய்விட்டது
வீடு வண்ணையை பார்த்து நிற்கிறது

சந்தோஷ சிரிப்பலைகள்
மோதிய வீட்டினுள்ளே
இன்று ஊமை அழுகையும், பெருமூச்சொலியும்
குடிகொண்டுள்ளது

கூரையில்லாததால்
மழை, வெயில், பனியெல்லாம்
வீட்டைக் காயப்படுத்திக் கொண்டிருக்கிறது
இனி வீடு நெடுநாள் நின்று பிடிக்காது.

குடும்பத்தினர்

திருநெல்வேலி. [3845]

## 1-ம் வருட நினைவஞ்சலி



| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 09 | 24 |
| \| | \| |
| 06 | 12 |
| \| | \| |
| 1978 | 1991 |

### வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

சகல கிளைச் சங்க உறுப்பினர்களுக்குமான

## முக்கிய அறிவித்தல்

தங்களுக்கும், தங்கள் நிலையங்களுக்கும் தேவையான ஆயுத, மற்றும் உபகரணங்கள் தொடர்பான முழு விபரங்களுடன் உடனடியாகத் தங்கள் தங்கள் கிளைச் சங்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்,

சூசை எட்வேப் — தலைவர்
அன்ரன் இராசநாயம் — செயலாளர்

1083, நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(3847)

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தம்பு நடேசு

(கண்ணன் கூல்பார் உரிமையாளர்)
கொடிகாமம்

மலர்வு: 5-5-1950
தேசத்துரோகியின் அழிப்பு: 28-12-1989

திதி 24-12-92

அன்புத் தெய்வமே - எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டு
ஆண்டு மூன்று ஆனாலும்
ஆறவில்லை இன்னும் எம்மனதில்

பிரிவின் துயரில் தவிக்கும்
மனைவி, பிள்ளைகள்
உறவினர்கள்.

கச்சார் வெளி,
பளை. (3844)

## ஓராண்டு நினைவஞ்சலி



# நினைவு கூருகின்றோம்...

## 1992-12-24

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் போராளிகளைப் பயிற்சிக்கு அழைத்துச் செல்கையில் மணலாறு - ஒதியமலைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

லெப். காண்டீபன் /எம். பி. (சுப்பிரமணியம் சிறிஸ்கந்தராசா - குமுழமுனை - மணலாறு)

மற்றும் பயிற்சிக்குச் சென்று கொண்டிருந்த போராளிகளான -

வெள்ளை (இ. சற்குணநாதன் - 3-ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு)

இடிஅமீன் (கணபதிப்பிள்ளை சிவலோகநாதன் - பெண்கள் விவாயத் திட்டம், முல்லைத்தீவு வீதி, நெடுங்கேணி - மணலாறு)

ரவி (கனகராசா விக்கினேஸ்வரன் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

அன்சராஸ் (நமசிவாயம் கலையரசு - தென்னமரவடி - திருக்கோணமலை)

விக்கி (கந்தையா ரவீந்திரன் - 5-ம் வட்டாரம், திரியாய் - திருக்கோணமலை)

தீசன் (நல்லதம்பி விஜேந்திரன் - காட்டுக்குளம், திரியாய் - திருக்கோணமலை)

சந்துரு (யோசப் பொன்னுத்துரை ஜோன்பொஸ்கோ இளமருதங்குளம், சேமமடு, ஒலுமடு - வவுனியா)

1985 ஆம் ஆண்டு கல்லடி முகாம் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுப் பின்னர் கொலை செய்யப்பட்ட -

★ சத்தியன் (எஸ் யோகராசா - கொம்மாந்துறை- மட்டக்களப்பு)

மட்டு. வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். சகாதேவன் (தர்மலிங்கம் கோகுலநாதன் - மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை -மட்டு.)

1986 ஆம் ஆண்டு மட்டு: ஆரையம்பதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

சுது (சதானந்தன் நிர்மலநாத் - நிர்மலநாத் வீதி. அரியாலை - யாழ்.)

மட்டு. தாழங்குடாப் பகுதியில் தேசவிரோதிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

நரேன் (ஏகாம்பரலிங்கன் விஜயசுகன் - 27/1, 3-ம் குறுக்கு வீதி, பாஷையூர் - யாழ்.)

லத்தீப் (முகம்மது அலியார் முகமது லத்தீப்- ஒல்லிக்குளம், காத்தான்குடி - மட்டு.)

1987 ஆம் ஆண்டு காரைநகர்ப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

சேரன் (கண்ணன் - கீரிமலை வீதி, சித்தங்கேணி - யாழ்.)

1988 ஆம் ஆண்டு கம்மடுப் பகுதியில் இந்தியப் படையினரின் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய -

சூர்க்காஸ் (அருள்பிரகாசம் நிக்சன்போல் - 8-ம் வாய்க்கால், உருத்திரபுரம் - கிளிநொச்சி

தேசவிரோதிகளால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை உணவகப் பொறுப்பாளர் -

சந்திரகுமார்

1990ஆம் ஆண்டு குப்பிளான் பகுதியில் வீரச்சாவெய்திய -

களாகக் காணவில்லை. இவர் களைக் கண்டவர்கள் அண்மையிலுள்ள காவல் துறைக்கோ அல்லது உடுவில் கிழக்கிலுள்ள அண்ணா சன சமூக நிலையத்திற்கோ அறிவிக்கவும். தகவல்: இ. சின்னம்மா (தாய்) உடுவில்
(3838)

## கண்காட்சி முடிவுற்றது

(கொழும்புத்துறை)

தென்மராட்சி வேரக் கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கைப்பணி பொருட்காட்சி சங்கத் தலைவி குமுதினி- கணபதிப் பிள்ளை தலைமையில் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது.

யாழ். மாவட்ட ஆணையாளரும், அரச அதிபருமான திரு கா. மாணிக்கவாசகரும், அரச அதிபரின் பாரியார் திருமதி மா. யோகேஸ்வரியும் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி பொருட்காட்சியை சம்பிரதாய பூர்வமாக மங்கள விளக்கேற்றித் திறந்து வைத்தனர்.

## விளையாட்டுப் போட்டி

நாயன்மார்கட்டு சனசமூக நிலையமும் சைவ அபிவிருத்திக் கழகமும் இணைந்து நடாத்திய சிவபரன் பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஞாயிற்று கிழமை 20-12-92 அன்று நடைபெற்றது.

திரு. இ. ஆவணமுத்து. திரு ப மகேந்திரதாஸன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் அரியாலைப் பிரதேசப் பொறுப்பாளர் மாவி, மகேஸ்வரி வித்தியாசாலை அதிபர் பஞ்சலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்கலந்துகொண்டனர்

## வன்னியில் மலேரியா

(வவுனியா)

வன்னிப் பகுதியில் மலேரியா காய்ச்சல் மிக மோசமாகப் பரவி வருகிறது. இந்த நோயினால் பாதிப்படைந்தவர்கள் வைத்திய சிகிச்சை பெறுவதற்காக அலைகின்றனர்

ஒரு குடும்பத்தில் பலருக்கு இந்தக் காய்ச்சல் தொற்றியுள்ளது.

இப் பகுதியில் சுகாதாரப் மருத்துவ வசதிகள் பாதிப்படைந்திருப்பதனால் நோயாளிகள் போதிய சிகிச்சை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
(தி)

(3845)

## 1-ம் வருட நினைவஞ்சலி



| வீரஜனனம் | | வீரச்சாவு |
|---|---|---|
| 09 | | 24 |
| 06 | | 12 |
| 1978 | | 1991 |

### வீரவேங்கை இளம்பருதி ராஜ்

(கைலாயநாதன் சிவகணேசன்)

இரு குலத்திற் கொருகொடியாய் வந்துதித்த குலமகனே ராசா! எமைவிட்டுப்பிரிந்து இன்று ஓராண்டு ஆனதடா நோயுற்ற அன்னை, தந்தை உன் பிரிவால் துடிக்கின்றார் துணையற்ற அக்காவும் துயரத்தால் வாடுகின்றாள் தாயகத்தின் விடிவிற்காய் புறப்பட்டாய் வேங்கையென தாயகம் விடியுமுன்னே விதையானாய்! உரமானாய்!! உன்னுடனே உறங்குகின்ற வாணனுடன் சீராளன் மாவீர வேங்கைகட்கு எம் இதய அஞ்சலிகள்

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அக்கா,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

இணுவில் மேற்கு,
இணுவில்.
(3809)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

| வீரப்பிறப்பு : | வீரச்சாவு: |
|---|---|
| 22-06-1972 | 24-12-1988 |

### வீரவேங்கை கூர்க்காஸ்

(அருள்பிரகாசம் நிக்சன்போல்)
(உருத்திரபுரம்)

தாயக மண்ணில் வித்தாகி
வீர விடுதலைப் போரில்-விதையாகி
மானசீகர வாழ்வில் - பயிராகி
நம்மின வாழ்விற்கு வளம்சேர்க்கும்
மாவீரா! மைந்தா!! உன்
பணி எம் அகக்கண் முன்.

உன் பிரிவால் துயருறும்
உற்றார், உறவினர்
குடும்பத்தினர்.

உருத்திரபுரம் கிழக்கு.
உருத்திரபுரம்.
(3779)

கொடிகாமம்

| மலர்வு: | தேசத்துரோகியின் அழிப்பு: |
|---|---|
| 5-5-1950 | 24-12-1989 |

திதி 24-12-92

அன்புத் தெய்வமே - எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டு
ஆண்டு மூன்று ஆனாலும்
ஆறவில்லை இன்னும் எம்மனதில்

பிரிவின் துயரில் தவிக்கும்
மனைவி, பிள்ளைகள்
உறவினர்கள்.

கச்சார் வெளி,
பளை.
(3844)

## ஓராண்டு நினைவஞ்சலி



### கப்டன் வாணன்

(சண்முகலிங்கம் மோகனகுமார்)

| வீரஜனனம்: | வீரச்சாவு: |
|---|---|
| 1973-08-01 | 1991-12-24 |

மறக்க முடியுமா மறைந்த மாவீரனை
மக்களுக்காய் புறப்பட்டாய்
மக்களுக்காய் மரணித்தாய்
மக்களுக்காய் மரணித்த மறத்தமிழ் செல்வமே
வாணன் என்று பெயர் கொண்ட
எம் இனிய வீரனே
நீ சென்று ஓராண்டல்ல ஆண்டாண்டு
சென்றாலும் ஓயாது உன் நினைவு
தினம் உன்னை நினைக்கின்றோம் - உன்
நினைவில் தான் நாம் வாழ்கிறோம்
உந்தன் இலட்சியத்தின் எல்லைவரை
ஓயாது எம் கரங்கள் - அந்த
பயண வழிப்பாதையில் தொடர்ந்து
வரும் உன் நினைவுகள்

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

இவரின் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்
நண்பர்கள்

சிவகுமார் வீதி,
உரும்பராய்.

தற்போதைய முகவரி;-
159 2. நல்லலக்ஷ்மி அவெனியு,
நல்லூர்.
(3848)

லத்தீப் (முகம்மது அலியார் முகமது லத்தீப்- ஒல்லிக்குளம், காத்தான்குடி - மட்டு.)

1987 ஆம் ஆண்டு காரைநகர்ப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

சேரன் (கண்ணன் - கீரிமலை வீதி, சித்தங்கேணி - யாழ்.)

1988 ஆம் ஆண்டு கம்மடுப் பகுதியில் இந்தியப் படையினரின் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய -

கூர்க்காஸ் (அருள்பிரகாசம் நிக்சன்போல் - 8-ம் வாய்க்கால், உருத்திரபுரம் - கிளிநொச்சி -

தேசவிரோதிகளால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை உணவகப் பொறுப்பாளர் -

சந்திரகுமார்

1990ஆம் ஆண்டு குப்பிளான் பகுதியில் வீரச்சாவெய்திய -

ஜீவா (மஞ்சுளா சிவபாதம் - 782-வது பண்ணை, செட்டிக்குளம் - வவுனியா

கட்டுவன் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்து, யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய -

நளினிகாந்தி (கவிதா பழனிநாதன் கொக்குத்தொடுவாய் - மணலாறு)

1991-ம்ஆண்டுபுன்னாலைக்கட்டுவன் ஈவினைப்பகுதியில்நிகழ்ந்த தற்செயலான வெடிவிபத்தில்எமைப்பிரிந்த-

இளம்பரிதி / ராவ் (கைலைநாதன் சிவகணேசன் - சிவன்பண்ணை வீதி, கொட்டடி - யாழ்.)

கப்டன் வாணன் (சண்முகலிங்கம் மோகனகுமார் - உரும்பராய் கிழக்கு - யாழ் )

சீராளன் / ரஞ்சன் (முருகேஸ்வரன் வரதன் - பலகாடு, காரைநகர் - யாழ்.)

அச்சுவேலிப் பகுதியில், இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

சந்துரு (செல்லையா சுகுமார் - ஈச்சமோட்டை வீதி, சுண்டிக்குளி, யாழ்.)

மணலாறு கோயில் முனைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய

லெப். ராதா / தமிழரசன் (சிவஞானம் கண்ணன் - 35ஆம் கிராமம் - மட்டக்களப்பு)

2-ம்லெப். நிருசுதா (சுப்பிரமணியம் சுசிலாதேவி - 6ஆம் யூனிற், வட்டக்கச்சி - கிளிநொச்சி)

ஐயங்கேணிப்பகுதியில் வீரச்சாவெய்திய -

கிளமன் (மா. சண்முகநாதன் - ஐயங்கேணி - மட்டக்களப்பு)

மற்றும், நாட்டுப்பற்றாளரான -

சி. நிதி (ஐயங்கேணி)

த. பீதாம்பரம் (ஐயங்கேணி)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

* மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/5638)

சிந்தனைக்கு

போராட வலிமை இருக்கவேண்டும் அல்லது புறமுதுகிட்டோட புத்தி இருக்கவேண்டும்.

— ஸேம்யல்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 24- 12- 1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண் - 05

## "தொண்டாவின் இலக்கு?"

"பாராளுமன்றத் தெரிவுக்குழு தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்து விட்டது. இனப்பிரச்சினைக்கு தெரிவுக்குழு முன் வைத்த திட்டம் தமிழ் மக்களினால் ஏற்கக் கூடிய தொன்றல்ல. இத் தீர்வுத்திட்டம் இனப்பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்தி விடப்போவதில்லை" இவ்வாறு தெரிவித்து இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து வெளியேறியுள்ளது.

இது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தீர்மானம் எனத்தெரிவிக்கப்பட்டிருப்பினும் அமைச்சர் தொண்டமானின் முடிவு என்று கூறுதலே பொருந்தும். இது தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவிற்கு, இ. தொ. கா. எழுதியுள்ள கடிதத்தின் ஒவ்வொரு சொல்லும் அமைச்சர் தொண்டமானின் வாயில் இருந்து உதிர்ந்தவை என்று கூறினாலும் மிகையில்லை.

அமைச்சர் தொண்டமானின் இத் திடீர் அறிவிப்பானது தமிழ் மக்களின் பிரச்சினையில் அவர் கொண்டிருந்த அக்கறையால் எழுந்ததா? அல்லது தற்பொழுது. இ. தொ. கா. விற்குள் எழுந்துள்ள நெருக்கடி காரணமாக எழுந்ததா? அல்லது அவருடன் தொடர்புள்ள வெளிசக்திகள் சிலவற்றின் ஆலோசனையின் பால் எழுந்ததா? என்பது குறித்து தற்பொழுது அறுதியிட்டு முடிவு எதையும் கூறிவிட முடியாது. ஆனால், அமைச்சர் தொண்டமான் இவ் அறிவிப்பின் மூலம் தெரிவுக் குழுவிற்கும், தான் அங்கம் வகிக்கும் அரசாங்கத்திற்கும் தனது எதிர்ப்பைக் காட்டியுள்ளதோடு, நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுடன் தொடர்பில்லாத, ஆனால், தமிழர் என்ற ரீதியில் மட்டும் தொடர்புடைய அமைச்சர் தொண்டமான் எக் காரணத்திற்காக தெரிவுக்குழுவில் இருந்து வெளியேறினாலும், அவரது முடிவு வரவேற்கப் படக் கூடியது ஒன்றே. இதேவேளை இம் முடிவின் மூலம் அமைச்சர் தொண்டமான் தன்னை சிங்கள கட்சிகள் ஒருபோதும் எந்த வற்புறுத்தலுக்கு உள்ளாக்க முடியாது என்பதையும் தெளிவாக்கி

# உணவுப் பற்றாக் குறையும் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும்

இவ்வாறு சமைக்கப்பட்ட இலைசேர் பாற்கஞ்சியில் 14.5 கிராம் புரதமும் 475கிலோகலோரிசக்தியுமுண்டு 6 மாதம் முதல் 6 வயதுடைய சிறுவர்களுக்கு 50-150 கிராம் இலைசேர் பாற்கஞ்சி போதுமானதாகும். கர்ப்பவதிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் இது மிகவும் உகந்தது. தினமும் உட்கொள்ள வேண்டும்.

### 9-ம் மாதம்

குழந்தையின் வயது 9 மாதமாகும்போது அநேகமான பிள்ளைகள் பெரியவர்கள் உண்ணும் உணவுகளை மிளகாய் போடாமல் உண்பார்கள். இவையெல்லாம் சமிபாடடையக்கூடியவை. ஆகவே பயமின்றிக் கொடுக்கலாம். முன்பு கூறிய உணவு வகைகளுடன் பிட்டு, தோசை, இடியப்பம், இட்டலி போன்றவற்றை பால் சொதியுடன் கொடுக்கலாம். காலை உணவுடன் வாழைப்பழம், பப்பாசிப்பழத்தையும் கொடுக்கலாம். காலை 10 மணியளவில் எலுமிச்சம்பழம் போன்ற பழரசம் கொடுப்பது நன்று மதிய உணவாக சோறு பால்க்கறியுடன் கொடுக்கலாம். முக்கியமாக பருப்பு, கிழங்கு. இலைவகை, முட்டை, மீன் இறைச்சி என்பவற்றை சிறிது சிறிதாக வெட்டி நன்கு அவித்து கறியாக உணவுடன் சேர்த்துக்கொள்ளல் வேண்டும். மாமிச உணவு உண்பவர்கள் ஆடு, மாடு, கோழி இறைச்சிகளை சிறிதுசிறிதாக வெட்டி நன்கு அவித்து கறியாக உணவுடன் சேர்த்துக் கொள்ளலாம். மாலையில் பாலுடன் ஒரு சிற்றுண்டியாக பொரியரிசி சோயா- உழுந்து, மாவிற் செய்த களியும் கொடுக்கலாம். இரவு உணவாக காலை உணவுபோல் இடியப்பம், பிட்டு, தோசை, இட்டலி கொடுக்கலாம். ஒன்பது மாதங்களுக்கு மேல் கூடிய உணவுகளை உண்பதால் பால் தினமும் மூன்று தடவைகளுக்குமேல் தேவையில்லை. காலை, மாலை, இரவு என மூன்று வேளை கொடுக்கலாம். பகலில் பாலைக்கொடுத்தால் அநேகமான பிள்ளைகள் மதிய உணவை உண்ணமாட்டார்கள். மேலும் இடையில் இனிப்புப்பண்டங்கள் உண்பதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

### சத்துக்குறைவினால் ஏற்படும் நோய்கள் (Malnourishel Children)

இவர்கள் தமது வயதிற்குச் சிறியவர்களாகவும், மெலிவாகவும் காணப்படுவர் நிறையும் வளர்ச்சிப்பாதையை விட்டு கீழேயும் விலகிவிடும். அத்துடன் தசை மெலிந்து கொழுப்பு அற்று எலும்புந்தோலுமாகக் காணப்படுவர். சிலர் முகம், கை, கால் வீங்கி ஆர்வமில்லாது காணப்படுவர்.

இவ்வாறானகுணாதிசயங்களு

—4—

டன் (Clinical Features) காணப்படும் சத்துக் குறைவான பிள்ளை வைத்தியரிடமோ, சுகாதார நிலையத்திலோ காண்பித்து தகுந்த சிகிச்சைபெறுவது நல்லது. இத்தகைய சத்துணவுக் குறைவினால் இரண்டு பிரதான நோய்கள் ஏற்படலாம்.

அ) உடல் கரைவு (Marasmus)

ஆ) புரதக் கரைவு நோய் (Kwashiorkor)

அ) உடல்கரைவு (Marasmus)

பிள்ளைகள் மெலிந்து எலும்பும் தோலுமாகத் தோற்றமளிப்பார்கள். இது முக்கியமாக 'சத்தியற்ற' (Low Calorte Diet) உணவு உண்பதனாலேயே உண்டாகிறது.

மாவுப் பொருள்கள் (தானிய வகைகள்) கொழுப்புப் பொருள்கள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் சத்து கிடையாது. இந்நோய் பெரும்பாலும் போதியளவு உணவு கிடைக்காமையால் அகதி முகாம்களில் வாழுபவர்களிடமும் வறுமைப்பட்ட குழந்தைகளிடமுமே ஏற்படும். இவர்களுடைய எடையும் 65 சதவீதத்திற்கு கீழேதான் இருக்கும். பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் நிறை குறைந்து கொண்டேபோய் உடல் மெலிந்தும் வளர்ச்சி தடைப்பட்டும் விடுகிறது. சிலர் எலும்பும் தோலும் உள்ள நிலையில் இருப்பர். முகம் வயோதிபர் போலவும் கண்கள் தள்ளியும் தென்படும். பசியிருக்கும் அத்துடன் சளிக் காய்ச்சல், வயிற்றோட்டமும் இருக்கலாம். அதிசக்தி உள்ள கொழுப்பு எண்ணெயுள்ள உணவை மாப்பொருளுடன் சேர்த்து அடிக்கடி கொடுத்தால் இந்நிலை மாறி 3—4 மாதங்களில் சுகமடைவர்.

### ஆ) புரதக்கரைவு நோய் (Kwashiorkor)

வீங்கிய உடம்பு கபிலநிறமாக மாறிய தலைமயிர், பாதிக்கப்பட்ட தோல் என்பன காணப்படும். தசை மெலிந்து வளர்ச்சி தடைப்பட்டிருக்கும். சோம்பலாகவும் விளையாடுவதற்கு ஆர்வமற்றும், சுற்றுப்புறத்தில் அக்கறையுமின்றி அழுது கொண்டிருப்பர். தோல் இடைக்கிடை கருமையடைந்தும், உரிந்தும் சிவப்பு நிறமாயும் மாறிவிடும். தோலில் வெடிப்புக்கள் உண்டாகி இருமியாலும் தாக்கப்பட்டு புண்கள் ஏற்படும். நிறம் மாறிய மயிர் மென்மையடைந்து கொட்டியும் விடும். இத்துடன் வயிற்றோட்டம், புழு வியாதிகள், சளிக்காய்ச்சல் என்பனவும்ஏற்படும். மாலைக்கண் நோயும் ஏற்படலாம். முறையான சமவிகித உணவுகள் (இலைசேர் கஞ்சி, பொரியரிசி) முக்கியமாக புரதத்துடன் கொடுத்தால் வீக்கம் குறைந்து 4—6 கிழமைகளில் சுகப்படுத்த முடியும். இவர்கள் சோம்பலாகவும் ஆர்வமற்றும் இருப்பதால் முதல் சிலநாட்களுக்கு உணவுகள் கொடுப்பதும் கஷ்டம். ஆகவே மூக்கினூடாக வயிற்றினுள் குழாய் விட்டு (Nasogastric Tube) பால், முட்டை போன்ற சத்துள்ள உணவுகள் கொடுக்க வேண்டி வரும். எனவே வைத்தியரின் உதவிதேவை. சத்துணவுக் குறைவினால் பள்ளிக்குச் செல்லும் சிறுவர்கள், கர்ப்ணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள்?

சீர்மாறன்

[ தொடரும் ]

# 89,000 தமிழ் அகதிகள் இலங்கை திரும்புவர்

(கொழும்பு)

தமிழ் நாட்டில் தங்கியிருக்கும் சுமார் 89,000 தமிழ் அகதிகள் அடுத்த வருடம் நாடு திரும்ப உள்ளதாகத் தெரிய வருகிறது.

இவ் அகதிகள் நாடு திரும்புவதற்குவேண்டியசகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக புனர்வாழ்வு அமைச்சர் பி. தயாரத்தினா கூறியுள்ளார். இவ் அகதிகள் நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்து தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர்.

# மாத்தளைதோட்ட பகுதியில் 20 தமிழர் கைது

(மாத்தளை)

மாத்தளை தோட்ட பகுதிகள் 19ஆம் திகதி இரவு சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தியதில் சுமார் 20 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில்இருந்தும், மாத்தளைபிரதேசபொலிஸ் பிரிவுகளை சேர்ந்தவர்களுமாகசுமார் 500க்குமேற்பட்ட பொலிசார் இந்த தேடுதல் நடவடிக்கையில்ஈடுபட்டனர். மாலை 6.00 மணி தொடக்கம் மறுநாள் காலை வரையிலான 11 மணிநேர தேடுதல் நடைபெற்றது.

கந்தநுவர, கவரகல, நெலுவகந்த ஆகிய தோட்ட லயன்களில் இருந்தும், காடுகளில் இருந்தும் இத்தமிழர்கள்கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

# தாண்டிக்குள முகாமில் இளைஞர் தடுத்து வைப்பு

## ஆடைத் தொழிற்சாலைகள்

# திட்டம் பூர்த்தியாக முன்பே தொல்லைகள் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை பூராகவும் இந்த ஆண்டு முடிவதற்கு முன்னர் 200 ஆடைத்தொழிற்சாலைகளை அமைக்கும் திட்டத்தின் கீழ் திட்டம் முடியமுன்னர் அங்கு பல்வேறு வடிவான போராட்டங்கள் ஆரம்பமாகியுள்ளது.

இங்கு வேலைசெய்யும் ஊழியர்களுக்கு சுமார் ரூ 2000/- மேற்பட்ட சம்பளத்தை நிர்வாகம் வழங்கவேண்டும் என ஜனாதிபதி வேண்டியுள்ளார். ஆனால் இப்படியான சம்பளத்தை வழங்ககூடிய நிலையில் இத் தொழில்சாலைகள் இல்லை. எனவே ஊழியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே கருத்து முரண்பாடுகள் நிலவிவருகின்றது.

இங்கு சனசவிய உதவித் திட்டத்தின்கீழ் உதவி பெற்ற ...யூடாக மீதி பணத்தை சம்பளமாக வழங்குவதற்கு தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகின்றது.

இவ்வாறான ஆடை தொழிச் சாலையை அமைத்ததின் நோக்கம் சனசவிய திட்டத்தை நிறுத்துவதே ஆகும். எனவே அரசாங்கம் திட்டத்தை எப்படியும் செயற்படுத்தியே தீரவேண்டிய ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மீளக் குடியமர்விற்கு 15 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து அகதிகளாக உள்ள மக்களுக்கு மீளக் குடியமர்தல் நிவாரணம் வழங்குதவற்காக சுமார் 15 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வீடுகளைத் திருத்துதல், வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளதாகப் புனர்வாழ்வு சமூக நலத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

ஏற்கனவே மேற்படி பகுதிகளில் சுமார் 29,000 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன அல்லது புதிய இடங்களில் வசித்து வருகிறார்கள்

...குடன் தொடர்புள்ள வெளிசக்திகள் சிலவற்றின் ஆலோசனையின் பால் எழுந்ததா? என்பது குறித்து தற்பொழுது அறுதியிட்டு முடிவு எதையும் கூறிவிட முடியாது. ஆனால், அமைச்சர் தொண்டமானின் இவ் அறிவிப்பின் மூலம் தெரிவுக் குழுவிற்கும், தான் அங்கம் வகிக்கும் அரசாங்கத்திற்கும் தனது எதிர்ப்பைக் காட்டியுள்ளதோடு, நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுடன் தொடர்பில்லாத, ஆனால், தமிழர் என்ற ரீதியில் மட்டும் தொடர்புடைய அமைச்சர் தொண்டமான் எக்காரணத்திற்காக தெரிவுக்குழுவில் இருந்து வெளியேறினாலும், அவரது முடிவு வரவேற்கப் படக் கூடியது ஒன்றே. இதேவேளை இம் முடிவின் மூலம் அமைச்சர் தொண்டமான் தன்னை சிங்கள கட்சிகள் ஒரு போதும் எந்த வற்புறுத்தலுக்கு உள்ளாக்க முடியாது என்பதையும் தெளிவாக்கியுள்ளார்.

ஆனால், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனத் தம்மை கூறிக் கொள்ளும் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் தெரிவுக்குழுவின் தீர்வுத்திட்டம் பற்றிய அறிக்கை விட்டதுடன் நிறுத்திக் கொண்டார்கள். அதேவேளை "தெரிவுக்குழுவில் இருந்து உடனடியாக விலகும் சாத்தியம் எதுவுமில்லை" எனவும் அறிவித்துள்ளார்கள். அதாவது, தம்மை ஏமாற்றிய தெரிவுக் குழுவை புறக்கணிப்பதற்குக் கூட அவர்களுக்கு துணிவு பிறக்கவில்லை.

ஆனால், தமிழ்க் குழுக்களின் நிலைகவலைக்குரியது அமைச்சர் தொண்டமான் தெரிவுக்குழுவிருந்து வெளியேறலாம், ஏன்விரும்பினால் அமைச்சர் பதவியையும் துறக்கலாம், பாராளுமன்ற அங்கத்தவர் பதவியையும் துறக்கலாம் ஏனெனில், அவருக்கு பக்கபலமாக ஒன்றேகால் லட்சத்திற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட கட்சியுண்டு, விளங்கியோ விளங்காமலோ ஆதரிக்கும் மக்கள் கூட்டமுண்டு. இதனால் பதவியைத் துறந்து தொண்டமான் செல்ல இடமுண்டு.

ஆனால், தெரிவுக்குழுவை பகிஷ்கரித்துவிட்டு அல்லது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்துவிட்டு தமிழ்க் குழுக்கள் எங்கே செல்வது அவர்களை இங்கு ஆதரிக்க கட்சியும் இல்லை, மக்களும் இல்லை. அவர்களுக்கு ஆயுத முனையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொடுத்த இந்திய இராணுவமும் இங்கில்லை இதனால், பதவிகளையும், அங்கத்துவத்தையும் துறந்தால் வயிற்றுப்பிழைப்புக்கும், வாழ்வதற்கும் இனிப்புதிதாக அவர்கள் யாரைக்காட்டிக் கொடுப்பது இவ்வாறு நோக்குகையில், அவர்கள் நிலை பரிதாபமானதுதான்.

ஆனால், தற்பொழுதாவது தமது இயலாமையையும், பலவீனத்தையும் உணர்ந்து அவர்கள் ஒதுங்கிக் கொள்வது நல்லது. தமிழ் இனத்திற்கு இவர்கள் இழைத்த துரோகமும் ஏற்படுத்திய அவமானமும் போதும். இனியாவது, மண்டியிட்டு ஏவல் செய்யும் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வது அவசியம். ஆனால், அவர்களால் அது முடியாது. ஏனெனில் இனத்தின் விடுதலையைவிட தமது சுகபோகம் அவர்களுக்குப் பெரியது. அவசியமானது.

---

இவ் அகதிகள் நாடு திரும்புவதற்குவேண்டியசகல ஒழுங்கு ...

... பதிவு செய்துள்ளனர்.

## மாத்தளை தோட்ட பகுதியில் 20 தமிழர் கைது

(மாத்தளை)

மாத்தளை தோட்ட பகுதிகள் 19ஆம் திகதி இரவு சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தியதில் சுமார் 20 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்தும், மாத்தளை பிரதேசபொலிஸ் பிரிவுகளை சேர்ந்தவர்களுமாக சுமார் 500க்குமேற்பட்ட பொலிசார் இந்த தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். மாலை 6.00 மணி தொடக்கம் மறுநாள் காலை வரையிலான 11 மணி நேர தேடுதல் நடைபெற்றது.

சந்தநுவர, கவரகல, நெலுவகந்த ஆகிய தோட்ட லயன்களில் இருந்தும், காடுகளில் இருந்தும் இத்தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

## தாண்டிக்குள முகாமில் இளைஞர் தடுத்து வைப்பு

(வவுனியா)

தாண்டிக்குளம் தடுப்பு முகாமில் இருபத்து மூன்று தமிழ் இளைஞர்கள் மொட்டை அடிக்கப்பட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பல மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த அப்பாவி இளைஞர்களை விடுதலைசெய்வதில் இராணுவம் தாமதம் காட்டி வருகின்றது. (தி)

## ரி. 56ரக துப்பாக்கி நிலத்துக்கடியிலிருந்துமீட்பு

சிறிலங்கா இராணுவத்திலிருந்து தப்பியோடிய இராணுவத்தினர் தம்முடன் எடுத்துச்சென்ற நவீனரக துப்பாக்கி ஒன்றை பொலிசார் மீட்டுள்ளனர்.

இத் துப்பாக்கி தென்பகுதியில் நீண்ட நாட்களாக நடைபெற்ற பல கொள்ளைச் சம்பவங்களுக்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ரி-56 ரகத்தைச் சேர்ந்த இத் துப்பாக்கியை பெலியத்தைப் பகுதியில் உள்ள வீடொன்றில் நிலத்துக்கடியிலிருந்து பொலிசாரினால் கண்டு பிடிக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் மேற்படி துப்பாக்கியையும் தன்னுடன் எடுத்துச் சென்றிருக்கிறார். இவர் வேறு பலருடன் இணைந்து இத்துப்பாக்கியைப் பயன்படுத்தி பல கொள்ளைச் செயல்களைப் புரிந்திருக்கிறார்என்றும் கூறப்படுகிறது.

---

(கொழும்பு)

இலங்கை பூராகவும் இந்த ஆண்டு முடிவதற்கு முன்னர் 200 ஆடைத்தொழிற்சாலைகளை அமைக்கும் திட்டத்தின் கீழ் திட்டம் முடியமுன்னர் அங்கு பல்வேறு வடிவான போராட்டங்கள் ஆரம்பமாகியுள்ளது.

இங்கு வேலைசெய்யும் ஊழியர்களுக்கு சுமார் ரூ 2000/- மேற்பட்ட சம்பளத்தை நிர்வாகம் வழங்கவேண்டும் என ஜனாதிபதி வேண்டியுள்ளார். ஆனால் இப்படியான சம்பளத்தை வழங்க கூடிய நிலையில் இத் தொழில்சாலைகள் இல்லை. எனவே ஊழியர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே கருத்து முரண்பாடுகள் நிலவிவருகின்றது.

இங்கு சனசவிய உதவித் திட்டத்தின்கீழ் உதவி பெற்றவர்களிடம் தொழில் அனுபவம் இல்லை. எனவே இவர்களின் அனேகருக்கு பயிற்சிக்கானபடி 500 ரூபா மட்டுமே வழங்க முடியும் என்றும் இவர்கள் தொழில் பயிற்சி பெற்றபின்னரே இவர்களுக்கு முழுமையான சம்பளத்தை வழங்கமுடியும் என தொழில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனவே அரசாங்கம் தொழில் பயிலுனர் சபை ...

... பனமாக வழங்குவதற்கு தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகின்றது.

இவ்வாறான ஆடை தொழிச் சாலையை அமைத்ததின் நோக்கம் சனசவிய திட்ட ...

... எனவே அரசாங்கம் திட்டத்தை எப்படியும் செயற்படுத்தியே தீரவேண்டிய ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மீளக் குடியமர்விற்கு 15 கோடி ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து அகதிகளாக உள்ள மக்களுக்கு மீளக் குடியமர்தல் நிவாரணம் வழங்குதவற்காக சுமார் 15 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வீடுகளைத் திருத்துதல், தளபாடங்களைக் கொள்வனவு செய்தல் போன்ற பல் வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளதாகப் புனர்வாழ்வு சமூக நலத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

ஏற்கனவே மேற்படி பகுதிகளில் சுமார் 29,000 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன அல்லது புதிய இடங்களில் வசித்து வருகிறார்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## சனசமூக நிலைய பொதுக்கூட்டம்

அத்தியடி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 27-12-92 ஞாயிறு மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றனர்.

## பண்டாவின் கொள்கையை சுதந்திரக் கட்சி கைவிட்டு விட்டது

**- ஸ்தாபக உறுப்பினர் கவலை**

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதன் ஸ்தாபகரான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கைகளைப் பின்பற்றத் தவறிவிட்டதாக இக்கட்சியின் ஸ்தாபக அங்கத்தவரான டி. பி. முன்னேக்குடம குற்றம் சாட்டியிருக்கிறார்.

பண்டா - செல்வா ஒப்பந்தத்தை அமுல் செய்ய அனுமதித்திருந்தால் பிரபாகரன் என்ற ஒருவர் பிறந்திருக்க மாட்டார் என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவரான இவர் திரு. பண்டாரநாயக்காவுடன் இணைந்து நீண்ட காலம் கட்சிக்காகச் சேவையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

குண்டு

...த்த சேதமடைந்துள்ளன.

எனினும் இச்சம்பவத்தின் போது ஏற்பட்ட உயிரிழப்புகள் பற்றியோ காயமடைந்தோர் பற்றியோ எந்த விபரமும் பெறப்பட முடியவில்லை.

மகாவலி திட்டத்தினுடன் தொடர்புடைய 'ஸ்கன்ஸ்கா' நிறுவனம் பாவனைக்கு உதவாதது என்று கணிப்பிட்டு கடலினுள் அழித்துவிடுமாறு கூறி கடற்படையிடம் கொடுக்கப்பட்ட ஜெலிக்நைட் வெடிபொருளை எடுத்துத்தான் விமானப்படையினர் பீப்பாக் குண்டுகளை தயாரித்து வந்தனர். விமானப்படைத் தளத்தில் குவிக்கப்பட்டிருந்த இந்த பீப்பாக் குண்டுகளை பாதுகாப்பான இடத்திற்கு மாற்றும்படி அதிகாரிகள் கட்டளையிட்டதைத் தொடர்ந்து அப்புறப்படுத்தப்பட்ட போளே இக் குண்டுகள் வெடித்துள்ளன

நட்டஈட்டில்

ஐ. தே. கவின் உள்ளூராட்சிச் சபை தேர்தல் அபேட்சகருக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவும், தீவிரவாத சம்பவங்களில் மரணமடைந்த ஐ. தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் முன்னாள் பா. உக்கள், அமைச்சர்களுக்கு ஆறுலட்சம் ரூபாவும் நட்ட ஈடாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

பதவிகளின் வேறுபாடுகளுக்கு ஏற்ப மக்களுடைய உயிரின் பெறுமதி வேறுபடும் என்று சமூகசேவை அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் கூறியிருப்பதாக தெரியவருகிறது. இதுகாலவரை நட்ட ஈடாக வழங்கப்பட்ட ஆறாயிரம் லட்சம் ரூபாவில் பெரும்பகுதி அரசாங்க ஆதரவாளருக்கே கிடைத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

யுத்தத்திற்கு

...கான அதன் ஏற்பாட்டை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மக்களில் நம்பிக்கை வைத்திருக்கும் நாங்கள், அனைத்து மக்களும் தாராள மனப்பான்மையுடன் வாழ்வதற்கான அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் பாடுபடவேண்டும் என்ற அதி. வண சௌந்தரநாயகம் ஆண்டகை ஆயர்கள் மாநாட்டில் உரையாற்றும் போது கூறினார்.

வருடத்துக்கு மூன்று முறை நடைபெறும் இம்மாநாட்டில் இலங்கையிலுள்ள அனைத்து மேற்றாசனங்களை சேர்ந்த ஆயர்களும் கலந்துகொண்டார்கள்.

பாதை

...கேட்டுள்ளார்.

போக்குவரத்துத் தடையால் குடாநாட்டு மக்கள் அனுபவிக்கும் இடர்களைச் சுட்டிக் காட்டிய அவர், கிளாலி அல்லது பூநகரிப் பாதையைத் திறந்து மக்கள் அந்தப் பாதையால் பிரயாணம் மேற்கொள்வதைச் சட்டப்படி உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்த ஆயர்,

நத்தார், வருடப்பிறப்புப் பண்டிகைக் காலங்களில் சமாதானச் சூழ்நிலை நிலவுவது ஐரோப்பிய நாடுகளிலும் ஏனைய நாடுகளிலும் ஓர் நியமமாகும். நத்தார் வருடப் பிறப்புப் பண்டிகையுடன் அண்டிச் சமாதானம் ஏற்பட்டால் பண்டிகை முடிவுறச் சமாதானமும் முடிந்து விடுகிறது என்றார்.

தமிழக

''ஒரு மாற்றுப் பாதுகாப்பு ஏற்பாட்டைச் செய்யாமல் மத்திய அரசு ராஜீவ்காந்திக்கு இருந்த சிறப்புப் பாதுகாப்புக் குழுவை விலக்கிக் கொள்ள முடிவு செய்ததும் ஒரு குறைபாடாகும்.''

''சம்பவம் நடந்த இடத்திலிருந்த காங்கிரஸ் கட்சி ஊழியர்கள் ராஜீவ்காந்தியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் சம்பந்தமாக காவல் துறையுடன் ஒத்துழைக்க வேண்டும் என்ற கடமையை உணரத் தவறிவிட்டார்கள்'' என மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி

இதற்கான விண்ணப்பப் படிவங்களை இம்மாத முடிவிற்குள் சுந்தரமடம் யூனிவேர்சல் நிலையத்தில் இயங்கும் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் ஒப்படைக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்குப் சமாதானத் தீர்வு ஏற்படும் போது அது நிரந்தரமாக நீடிக்கும் சமாதானமாக அமைய வேண்டும். சமாதானத்துக்கு நியாயமும், நீதியுமாக அமைந்த ஒரு தீர்வு முன்வைக்க வேண்டும். இராணுவத் தீர்வு இந்த விடயத்தில் ஏற்புடையதல்ல. அது வேண்டாம் என்று அதி. வண. தொமஸ் சௌந்தரநாயகம் மேலும் தெரிவித்தார்.

ஈழநாதம்

# பல்கலை. களில் நெருக்கடி அவசரகால விதி அமுலாகும்?

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது நிர்வாகக் கடமைகளை இராஜினாமாச் செய்வது பல்கலைக் கழகங்களில் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவசர காலச் சட்டத்தை பயன்படுத்தி பல்கலைக் கழகங்களை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப் படுத்தலாம் என்று பல்கலைக்கழக வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது நிர்வாகப் பதவிகளிலிருந்து ஜனவரி முதலாம் திகதி விலகுவதிலிருந்து பல்கலைக் கழகங்களின் செயற்பாட்டில் சிக்கல்களைத் தோற்றுவிக்கலாம் என்று தெரிவித்த பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் பேராசிரியர் அ. அலுவிகாரா பல்கலைக்கழகங்களை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப் படுத்தப்படும் சாத்தியம் இல்லை என்றார்.

பல்கலைக் கழகங்களை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப் படுத்துவதை தான் ஆதரிக்கவில்லை. வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியருக்கு வழங்கப்படவுள்ளதாக அறிவித்திருந்த 30 விகித சம்பள உயர்வு பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்றார்.

வரவு செலவுத் திட்டத்தில் அரசு வழங்கும் சம்பள உயர்வுடன், அரசு வழங்கவுள்ள 20 விகிதப் படியும் தமக்குப் பற்றாது என்று பல்கலைக் கழகங்கள் ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்திருப்பது பற்றி பேராசிரியர் அலுவிகாரா கருத்து வெளியிடுகையில்; பல்கலைக் கழக ஆசிரியர் அல்லாத பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள உயர்வு பற்றியும் பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவர் என்ற முறையில் தான் அக்கறை கொள்ள வேண்டும் என்றார்.

20 விகிதப்படி உயர்வு என்ற அமைச்சர் ஹமீட்டின் பரிந்துரைகளை நாம் ஏற்றுக் கொண்டு அரசு அதனை ஒரு தீர்மானமாக மேற்கொள்ள நாம் வழி செய்ய வேண்டும். எமக்குக் கிடைக்க இருப்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.

## பல்கலை. விவகாரங்கள் பத்திரிகையில் வரக்கூடாது

**– மானியக் குழுத் தலைவர்**

(கொழும்பு)

பல்கலைக் கழக விவகாரங்கள் செய்தித்தாள்களில்இடம் பெறக் கூடாது என்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவர் பேராசிரியர் அ. அலுவிகாரா தெரிவித்துள்ளார்

பல்கலைக் கழகப் புத்தி ஜீவிகள் சிலர் செய்தித்தாள்களில் அக்குவேறு ஆணிவேறாகக் கிழிக்கப்படுகிறார்கள் ஆனால் பதில் சொல்வதற்கு எந்த வழியுமில்லை. என்றார்அவர்

பல்கலைக் கழகத்தின் நிர்வாகம் கூட்டுப் பொறுப்பில் தங்கியுள்ளது. ஆசிரியர், மாணவர், துணைவேந்தர், மூதவை, அரசு எல்லோருமே நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர்கள்எனவும் அலுவிகாரா தெரிவித்தார்.

## 'குமண' வந்தது

[யாழ்ப்பாணம்]

ஒரு தொகுதி அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்களுடன் "குமண" கப்பல் நேற்று பருத்தித்துறையை வந்தடைந்தது.

முதலில் இக்கப்பலில் இருந்து இலவச சீருடைத் துணிகள், தபால் பொதிகள், இலவச பாடப் புத்தகங்கள் என்பனவற்றை இறக்கும் பணிகள் ஆரம்பமாகின என தெரியவருகின்றது.

## ஒளி விழா

[யாழ்ப்பாணம்]

யாழ். புகையிரத நிலைய முகாமில் தங்கியுள்ள திவக மக்கள் நடாத்தும் 'ஒளி விழா' 27-ம் திகதி ஞாயிற்றுகிழமை நடைபெறும். இவ் விழாவில் மறைக் கல்வியில் படித்து போட்டியில் பங்குபற்றியவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம் பெறும். (22)

## நோட்டம்

சிறிலங்கா விமானப்படையின் உலங்குவானூர்தி ஒன்று நேற்றுக்காலை யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றுள்ளது.

# 60 மிராஜ் விமானங்கள் தாய்வானுக்கு விற்பனை

**விமான விற்பனை அச்சுறுத்த பிரான்ஸ் மீது குற்றஞ் சாட்டி லாகவுள்ளது என சீனா யுள்ளது.**

[பிலிப்பைன்ஸ்]

பிரான்ஸ் தாய்வானுக்கு 60 நவீன போர் விமானங்களை விற்பனை செய்யவுள்ளது. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக சீனா அங்குள்ள பிரான்ஸ் துணைத் தூதரகத்தை மூடிவிடுமாறு பிரான்சைப் பணித்துள்ளது

பிரான்ஸ் மிராஜ் 2500 என்ற நவீனரக போர் விமானங்களையே தாய்வானுக்கு விற்பனை செய்யவுள்ளது. பிரான்ஸ் அரசின் இத்தகைய நடவடிக்கைகளை சீனா வன்மையாகக் கண்டித்துள்ளது. இதற்கு தனது கடும் எதிர்ப்பைத் தெரிவிக்குமுகமாக சீனாவிலுள்ள குவாங்வுவாங் என்ற இடத்திலமைந்திருந்த பிரான்ஸின் துணைத் தூதரகத்தை மூடிவிடுமாறு பிரான்ஸிற்கு சீனா அவசர உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது. சீனாவின் பாதுகாப்பிற்கு பிரான்ஸின் இந்த

## 15,000 உறுப்பினர் இ.தொ.காவில் வெளியேற்றம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து இருபத்து மூன்று முக்கிய உறுப்பினர்களும் சுமார் 15,000 சாதாரண உறுப்பினர்களும் வெளியேறியுள்ளனர். இதனைத் தொடர்ந்து இ. தொ. கா தனது அரசியல் நிலையில் பெரும் இக்கட்டான தொரு நிலையை அடைந்திருப்பதாக கூறப்படுகிறது. இதேவேளை இ. தொ. கா. விலிருந்து மேலும் பலர் விலகலாம் என்றும் கூறப்படுகிறது.

## எல்லையில்


அலுவலகம் தேவையான ஆயுதங்களைத் தருவதில்லை என படையினர் கூறுகின்றனர். அரசாங்கம் எம்மிடமிருந்த திறமையான அதிகாரிகளைச் சதிமூலம் கொன்றுவிட்டது''

''தற்போதுள்ள யுத்த நிலைமை கவலைதரும் விடயமாக உள்ளது. வடக்கு கிழக்கின் எதிர்காலம் எப்படி என சகல பகுதி மக்களும் எதிர்பார்க்கின்றனர். தற்போது உள்ள நிலைமை எதிர்காலம் குறித்து சந்தேகப்பட வைக்கின்றது''

''வடக்குகிழக்கிலுள்ள சிங்கள மக்களை அரசாங்கம் வேண்டாவெறுப்புடன்தான் கவனிக்கின்றது. எனவே அங்குள்ள சிங்கள மக்கள் அந்தப் பிரதேசத்தைவிட்டு வெளியேறுகின்றனர். இங்கு மரணங்கள் அதிகரிக்கின்றன''

''இவற்றிலிருந்து தெளிவா

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 31-ம் நாள் நினைவலைகள்

தாயின் மடியில்: 27 – 10 – 1972



தாய்மண் மடியில்: 24 – 11 – 1992

### கடற்புலி கப்டன் முரசு

தாயகம் மீட்டிடத் தன்னலம் கொன்றவா!<br>
தாயகம் மீட்டிடக் களம்பல வென்றவா!!<br>
படரும் உன் அன்பினால்<br>
எம் நெஞ்சை வென்றவா!!<br>
படையரண் தகர்ப்பினில்<br>
இன்னுயிர் தந்தவா!!

திருமலைத் தொடர்பகம் கொக்குவில்.

துயரத்தால் வாடும், உறவினர்கள், நண்பர்கள்.

[சி-5641]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகரட்ணம் கனகசிங்கம்

மானிப்பாய் லோட்டன் வீதியைச் சேர்ந்த திருமதி நாகரட்ணம் கனகசிங்கம் அவர்கள் 23 - 12 - 92 புதன் கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற கனகசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம், பூமகாலக்ஷ்மி, காலஞ்சென்ற சிவராஜலிங்கம், இரட்ணேஸ்வரி, இராஜேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற வைரமுத்து, காலஞ்சென்ற தேவராஜன், பூர்ணலிங்கம், சந்திரசேகரன், பத்மாவதி, நீலாய்தாட்சி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மானிப்பாய் லோட்டன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் (24 - 12 - 92) இன்று காலை 10.30 மணிக்கு நடைபெற்று பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

குமரபுரம், லோட்டன் வீதி, மானிப்பாய். [3851]

தகவல்: திருமதி வைரமுத்து (மகள்)

### நல்லார் வீரசிங்கம்

மல்லாகத்தைச் சேர்ந்த நல்லார் வீரசிங்கம் 23-12-92

### யாழ்ப்பாண மாநகரசபை

## இழுவைப் பெட்டிகளுடனான டிராக்டர்களை பதிவு செய்தல் - 1993

யாழ்ப்பாண மாநகரசபையினால் 1993-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் அபிவிருத்தி வேலைகளில் தமது டிராக்டரை வாடகை அடிப்படையிலோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ ஈடுபடுத்த விரும்பும் டிராக்டர் உரிமையாளர்கள் எதிர்வரும் 31. 12 92-ம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் வருடாந்தப் பதிவுக் கட்டணமாக ரூபா.1000/-ஐ செலுத்தி யாழ்ப்பாண மாநகர சபையுடன் தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களை மாநகரசபையின் வேலைப்

பொருந்தும் என்றார்.

வரவு செலவுத் திட்டத்தில் அரச வழங்கும் சம்பள உயர்

... மாணவர், துணை வேந்தர், மூதவை, அரச எல்லோருமே

---

யாழ்ப்பாண மாநகரசபை

## இழுவைப் பெட்டிகளுடனான டிராக்டர்களை பதிவு செய்தல் - 1993

யாழ்ப்பாண மாநகரசபையினால் 1993-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் அபிவிருத்தி வேலைகளில் தமது டிராக்டரை வாடகை அடிப்படையிலோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ ஈடுபடுத்த விரும்பும் டிராக்டர் உரிமையாளர்கள் எதிர்வரும் 31. 12 92-ம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் வருடாந்தப் பதிவுக் கட்டணமாக ரூபா.1000/-ஐ செலுத்தி யாழ்ப்பாண மாநகர சபையுடன தம்மைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விபரங்களை மாநகரசபையின் வேலைப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
21 12. 1992.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்
(சி-5631)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
24-06-1924

இறப்பு:
05-01-1992

## குமாரவேலு லட்சுமி (மண்டைதீவு)

திதி: 24-12-1992

''ஆறாது ஆறாது அழுதாலும் தீராது
நீறாகிப் போன நிலை நினைவிலும் மாறாது
மாறாத அன்புகொண்டு மகிழ்வுடனே வளர்த்தாயே!
தேறாது நிற்கின்றோம் தேம்பியே நாம் இங்கு''


உம் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

சகோதரர், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

24. அத்தியடி,
யாழ்ப்பாணம்

[3850]

---



காரைநகர் மண்ணின் காவிய நாயகன்

## வீரவேங்கை சந்துரு
## செல்லையா சுகுமார் (பாபு)

இலட்சியப்பற்று இதயத்தில் கொண்டாய்
கண்ணிமைபோல் எம் இனம் காத்தாய்
அன்னை மேல் அன்பு உண்டெனக் காட்ட
அந்நியன் கொட்டம் அடக்கிடச் சென்றாய்
அறிவுடன் அன்பும் பண்பும்
பாசமும் பொறுமையும் கொண்டாய்
நாட்டில் சிதையுற்ற நிலையில் வாடும்
செந்தமிழ் தாயை மீட்க செந்நீர் சொரிந்தாய்
ஆண்டுகள் ஒன்றென்ன
ஐம்பதுதான் கடந்தாலும்
எங்கள் இதயங்களில்
இருப்பாய் நீ என்றும்.

சக போராளிகளையும் அன்னாரின் வீட்டில் நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

என்றும் உன் பிரிவால் வாடும்,
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

தற்போதைய முகவரி
V. S. செல்லையா
16/18, விதானையார் வீதி,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

(3853)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

23.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7200

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

41-9741, 42-3267 24-5774, 26-5157, 27-9771, 26-1728, 28-1311, 24-7941, 27-7952, 24-4992, 26-6398, 26-3530, 26-8419, 41-9175, 27-8754, 71-4984.

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-0733, 26-3321, 26-0525 26-5529 42-3514, 26-2317, 26-2786, 26-0536, 41-9355, 26-5882.

---

படையினர் கூறுகின்றனர். அரசாங்கம் எம்மிடமிருந்த திறமையான அதிகாரிகளைச் சதிமூலம் கொன்றுவிட்டது''

''தற்போதுள்ள யுத்த நிலைமை கவலைதரும் விடயமாக உள்ளது. வடக்கு கிழக்கின் எதிர்காலம் எப்படி என சகல பகுதி மக்களும் எதிர்பார்க்கின்றனர். தற்போது உள்ள நிலைமை எதிர்காலம் குறித்து சந்தேகப்பட வைக்கின்றது''

''வடக்குகிழக்கிலுள்ள சிங்கள மக்களை அரசாங்கம் வேண்டாவெறுப்புடன்தான் கவனிக்கின்றது. எனவே அங்குள்ள சிங்கள மக்கள் அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறுகின்றனர். இங்கு மரணங்கள் அதிகரிக்கின்றன''

''இவற்றிலிருந்து தெளிவாகத்தெரிவது என்னவென்றால் இந்த அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் சிங்கள மக்களுக்குக் குறைகளை ஏற்படுத்தி நாட்டைப் பிரித்துக் கொடுப்பதேயாகும்''

''தமிழர்களுக்கு வேறு அரசு இல்லை. அதற்காக வடக்கு கிழக்கை இணைத்து தமிழர்களுக்கு அதிகாரங்களை வழங்கினால் நீண்ட காலம் செல்வதற்கு முன் அவர்கள் முழு நாட்டையும் ஆக்கிரமித்துவிடுவார்கள்''

''பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் டி. பி. விஜயதுங்கவிற்கு வடக்கு கிழக்குப் போரை நடாத்துவதற்குத் தெரியாது யுத்தத்தை நடத்துவதற்கான திறமை அவருக்கு இல்லை. வடக்கு கிழக்கிற்குச் சென்று ஆலோசனை வழங்கும் அளவிற்கு அவருக்கு அனுபவமும் இல்லை. அவர் சில அனுஷ்டானங்களிற்கும், தேசிய புத்தகங்களை வாசிக்கவுமே உரியவர்''

'இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதன் காரணம் தமிழர்களின் அபிலாசைகள் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வந்தமையாகும். அவர்கள் 30 ஆண்டுகாலமாக ஏமாற்றப் பட்டுவந்துள்ளார்கள்''

''எட்டு வருடங்களாகத் தமிழர்கள் போராடுவது தாங்கள் பிறந்த நிலத்தைப் பெறுவதற்காக ஆகும். நாங்கள் அதனைக் காப்பாற்றிப் பிரிவினை ஏற்படாது பாதுகாக்கப் போராடுகின்றோம்''

'சிங்கள மக்களுக்கு நாட்டைப் பரிபாலிக்கும் அளவிற்குத் திறமையில்லை என்பதை நடைபெறும் சம்பவங்கள் தெரிவிக்கின்றன''

''நான் கூறுவது என்ன என்றால் தமிழருக்கு வடக்கு கிழக்கை மட்டும் கொடுக்க வேண்டாம் முழு நாட்டையுமே தமிழரிடம் கொடுங்கள். அந்தக் காலத்திலாவது இந்த உயிர்ப்பலிகள் குறையட்டும்'' என்றார்.

---

... 23-12-92 புதன் கிழமை காலமானார். இவர் காலஞ்சென்ற கனகசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம், பூமகாலக்ஷ்மி, காலஞ்சென்ற சிவராஜலிங்கம், இரட்ணேஸ்வரி, இராஜேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற வைரமுத்து, காலஞ்சென்ற தேவராஜன், பூர்ணலிங்கம், சந்திரசேகரன், பத்மாவதி, நீலாய்தாட்சி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மானிப்பாய் லோட்டன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் (24 - 12 - 92) இன்று காலை 10.30 மணிக்கு நடைபெற்று பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

குமரபுரம்,
லோட்டன் வீதி,
மானிப்பாய். [3851]

தகவல்:
திருமதி வைரமுத்து
(மகள்)

---

## நல்லார் வீரசிங்கம்

மல்லாகத்தைச் சேர்ந்த நல்லார் வீரசிங்கம் 23-12-92 காலமாகிவிட்டார். இவர் சரஸ்வதியின் கணவரும், கருணாம்பிகைபாகன் (B D.), மீனாம்பிகை, கமலாம்பிகை, ஞானாம்பிகை, அம்பிகைபாகன் (C E B.), விமலாம்பிகைபாகன் (S. L. C C.), ஜெகதாம்பிகைபாகன், (L C. L ஜெகன்) ஆகியோரின் தகப்பனாரும், சி. நடராசா (லக்சலா), வனராஜசிங்கம் (கோண்டாவில்), அரசலிங்கம் (சுவீடன்), மகேஸ்வரி, சுகிலாதேவி, யோகராணி (ஆசிரியை) ஆகியோரின் மாமனாரும் ஆவார் அன்னாரின் ஈமக் கிரியைகள் 24-12-92 இன்று அவரது இல்லத்தில் நடைபெறும்.

புகையிரத வீதி,
மல்லாகம். (3849)

தகவல்: ஜெகன்
[மகன்]

---

## திரு. சந்தியா மாதன்

புங்குடுதீவு 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சந்தியா மாதன் 23 - 12 - 92 புதன்கிழமை தனது 106 ஆவது வயதில் காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புகையிரத வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
மா. கணபதி
(மகன்)

[3852]

---

## மகேந்திரன் காந்தரூபி (நந்தினி)

(நவாலி மகாவித்தியாலயம் 11-ம் ஆண்டு மாணவி)

நவாலியைச் சேர்ந்த திரு. திருமதி மகேந்திரனின் இரண்டாவது மகளாகிய காந்தரூபி 23 - 12 - 92 நேற்று காலமானார். இவர் நிர்மலேஸ்வரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன்). மோகனரூபி (நவாலி மகாவித்தியாலய மாணவி) ஆகியோரின் சகோதரியாவார்.

இவரின் ஈமக்கிரியைகள் [24 - 12 - 92] இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று நவாலி ஆரியம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி,
நவாலி. [3854]

தகவல்:
மகேந்திரன்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.